## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண். 110/2022

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17–ம் நாள் செவ்வாய்க்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 17.10.2023 | தந்தை பெயர்: | ரெங்கநாதன் |
| பெயர்: | ரம்யா<br>(PW1 chief continuation) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 30 /2023 |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி :17.10.2023</u>**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

09.03.2022-ல் தாவா சொத்தை பொறுத்து தருமபுர ஆதீனம் சார்பில் வழங்கப்பட்ட அனுமதி சான்றின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 19.03.2022-ல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மானம் கழகத்தால் வழங்கப்பட்ட பெயர் மாற்ற உத்தரவின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 12.07.2021-ல் எனது தகப்பனார் தருமபுர ஆதீனத்திற்கு செலுத்திய பகுதி ரசீதின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் HCP No.439/2022-ன் Status Report-ன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3 மற்றும் 5-ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்களுக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் விசாரணை நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி காணவில்லை என அவரது மாமனார் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்விக்கும் நீதி பேராணை மனு தாக்கல் செய்திருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். 1-ம் பிரதிவாதி கண்டுபிடிக்கப்பட்டு 3-ம் பிரதிவாதியால் சீர்காழி, நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். மாண்புமிகு உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை 3-ம் பிரதிவாதிகள் நிறைவேற்றியுள்ளார்கள் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி காணாமல் போன சமயத்தில் 3-ம் பிரதிவாதியால் விசாரணைக்காக தாவா சொத்தில் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடனுன் புகைப்பட கலைஞருடனுன் பூட்டை உடைத்து சோதனை நடத்தப்பட்டது என்றால் சரிதான். பின்னிட்டு ஏற்படும் பிரச்சனைகளை தவிர்க்கும் பொருட்டு தான் 3-ம் பிரதிவாதியால் தாவா சொத்தில் வீடு பூட்டப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து நாளது தேதி வரை பூட்டி தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு 1-ம் பிரதிவாதியிடமிருந்து குத்தகை உரிமை மாற்றி பெற்றுள்ளோம் என்றால் சரிதான். தற்போதும் 3, 5 பிரதிவாதிகள் நீதிமன்ற உத்தரவை பின்பற்ற தயராக உள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு 3 , 5 பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித உரிமையும் கொண்டாடப்படவில்லை என்றால் சரிதான். சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனையை தவிர்ப்பதற்காக 3-ம் பிரதிவாதியால் எடுக்கப்பட்ட சட்டபடியான நடவடிக்கைக்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்ட மனு சம்பந்தமாக நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது என்றும் அதைமறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி தற்போது எங்குள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால்

தெரியாது. தாவா தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**<u>4 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வட்டாட்சியரிடம் எனது தகப்பனார் கொடுத்த மனுவின் மீது வட்டாட்சியரால் அமைதி பேச்சுவார்த்தைக்கான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். அமைதி பேச்சுவார்த்தை கூட்டதற்கு எங்கள் தரப்பில் ஆஜரானோம். பிரதிவாதிகள் தரப்பில் ஆஜர் ஆக வில்லை என்றால் சரிதான். இருதரப்பினர் ஆஜராகவில்லை என்பதால் வட்டாட்சியரால் எவ்வித முடிவும் எட்டப்படவில்லை என்றும் நீதிமன்றம் மூலமாக பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டார் என்றாலும் சரியல்ல. நாங்கள் கொடுத்த மனுவின் மீது முறைப்படி நடவடிக்கைக் எடுத்த 4 ஆம் பிரதிவாதி மீதும் அவரது உயர்அதிகாரி மீதும் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 4-ம் பிரதிவாதிக்கு தன்னுடைய அதிகார வரம்பிற்குட்பட்டு தான் செயல்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

1, 2 பிரதிவாதிகள் ஏற்கனவே தோன்றா தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

**மறுவிசாரணை இல்லை.**